கங்க இஹல கோரலை பிரதேச சபை
கண்டி மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 27 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுன் 30 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின்முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் கங்க இஹல கோரலை பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 325,000 பெறுமதியான 02 காணிகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்மான சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்வரும் ஆண்டின் போது, சரி செய்கிறேன். |
| (ஆ) | ரூப 429,440 ஆன 47 இயந்திர மற்றும் இயந்திரஉபகரண உருப்படிகள் தளபாடங்கள் மற்றும் பொருத்துகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்களின் தன்மைக்கு ஏற்ப வேறு படுத்தி, கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்வரும் ஆண்டின் போது, சரி செய்கிறேன். |

#### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்ககள

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய கணக்ககள் | | |
| | 05 ஆண்டுகளை விஞ்சிய பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 768,611 ஆனது. | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 ஆண்டுகளை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 132,142 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில், சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

1.3.3 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உரிமையை உறுதி செய்து கொள்ள உறுதி மற்றும் சுவீகரிப்புக் கட்டளைகள் சமர்ப்பிக்காததனால்,கூட்டுத் தொகை ரூபா 82,747,268 ஆன காணி மற்றும் கட்டிட 07 உருப்படிகளை கணக்காய்வின் போது திருப்தியுடன் ஆய்வு செய்ய முடியாமல் இருந்தது. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடபடும் கணக்கு மீதிகளைஉறுதி செய்யும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காணி மற்றும் கட்டிடங்களுக்குரிய உறுதி மற்றும்சுவீகரிப்புக் கட்டளைகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

1.4 இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 152 ஆம் பிரிவு. | சபை அதிகார பிரதேசத்தினுள் அமைந்துள்ள 08 தொலை பேசி கோபுரங்களிலிருந்து 2016,2017 மற்றும் 2018 ஆண்டுகளுக்குரிய வியாபார வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், குத்தகை அறவிட வேண்டும். | நிலுவை வியாபார வரி அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) 1971 இன் 48 ஆம் இலக்க உள்ளுராட்சி மீதான விஷேட ஏற்பாடு | 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை புதிய பெறுமதி மதிப்பீடொன்று | சுற்றறிக்கை பிரகாரம், 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை புதிய | 2019 ஆண்டில் வீத வரியை மீள் திருத்த நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | சட்டம் மற்றும் 2008 திசெம்பர் 31 திகதிய 434 இலக்க பொது நிதி சுற்றறிக்கை. | மேற்கொள்ள வேண்டிய போதும், 2007 ஆண்டிற்கு பின் புதிய பெறுமதி மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீடொன்று மேற்கொள்ள வேண்டும். | எடுக்கிறேன். |
| (இ) | 2017 மே 05 ஆம் திகதிய 2017/42 இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமாணி iv(ஆ) | 2018 ஆண்டிற்காக அதிகார பிரதேசத்தினுள் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 17 பிரச்சாரக அறிவித்தல்களிலிருந்கு கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறிவித்தல் விளம்பர பலகைகளிற்காக துணைச்சட்டம் பிரகாரம், கட்டணம் அறவிட வேண்டும். | கள பரிசோதனையின் பின் நிலுவை மீதிகளை அறவிடுவத்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானசபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 15,466,363 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 10,821,559 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாகமுன்வைக்கப்பட்டமதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 2,136,000 | 2,330,256 | 2,431,826 | 1,199,914 | 1,936,000 | 2,046,294 | 2,041,893 | 1,422,056 |
| (ii) | வாடகை | 5,419,000 | 4,467,906 | 5,212,972 | 512,524 | 4,623,000 | 4,362,359 | 4,404,259 | 882,364 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,220,200 | 1,324,116 | 1,841,016 | 351,200 | 1,220,200 | 990,800 | 1,007,300 | 36,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 13,386,400 | 21,198,677 | 5,504,487 | 27,668,898 | 20,044,500 | 14,118,358 | 13,018,502 | 9,151,964 |
| | கூட்டுத் தொகை | 22,161,600 | 29,320,955 | 14,990,301 | 29,732,536 | 27,823,700 | 21,517,811 | 20,471,954 | 11,492,384 |

2.2.2 வீத வரி மற்றும் குத்தகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வீத வரி | | |
| (i) | 2013 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை அரச ஆதனங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 140,858 ஆன நிலுவை வீத வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | அரசஆதனங்களிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை வீத வரியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை பணத்தை துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | 182 வித வரி அலகுகளில் 05 ஆண்டுகளிற்கு முன் இருந்து அறவிட வேண்டிய ரூபா 727,698 இனை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காலத்திற்கு பொருத்தமாக வருமானம் சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை பணத்தை அறவிட சட்டரீதியான நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iii) | நிலுவை வீத வரி அறவிட வேண்டிய 117 வீத வரி அலகுகளை இதுவரை இனங்காண முடியாதிருந்தது. | இனங்காண வேண்டும். | பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்தின் உதவியுடன் ஆதனங்கள் பற்றி விசாரனையொன்று மேற்கொள்ளபடும் என அறிவிக்கிறேன். |
| (ஆ) | நீர் கட்டணம் | | |
| | 2003 ஆண்டு முதல் 07 உத்தேச திட்டங்களின் 63 நீர் பாவனையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 33,337 ஆன நீர் கட்டணம் அறவிடப்படவில்லை. | நிலுவை நீர் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில், நிலுவை நீர் கட்டணத்தை துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | ஏனைய குத்தகை | | |
| | சபையினால் குத்தகை வழங்கப்பட்ட சபையிக்கு சொந்தமமான 04 காணிகளிலிருந்து நீண்ட காலமாக அறவிட வேண்டிய குத்தகை ரூபா 152,766 தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்கி சொந்மான காணிகளிலிருந்து அறவிட வேண்டிய பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை பணத்தை அறவிட சட்ட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஈ) | முச்சக்கர வண்டி கட்டணம் | | |
| | 2018 திசெம்பர் 31 திகதி வரை பதிவு செய்யப்பட்ட 26 முச்சக்கர வண்டிகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 162,600 தொகையை அறவிட்டிருக்கவில்லை. | பதிவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டிகளிலிருந்து நிலுவை முச்சக்கர வண்டி கட்டணத்தை அறவிட வேண்டும். | நிலுவை பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 542,653 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 27,017,267 ஆன நிலுவை மீதியொன்று நிலவியது. | நிலுவை மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த தொகையை துரிதமாக பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும்,மக்கள் நலன், இலகுமற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்துக் கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டினுள், சபை நிதியத்தை பயன்படுத்தி மேற்கொள்வதற்கு திட்மிட்டிருந்த ரூபா 7,700,000 ஆன 56 அபிவிருத்தி கருத்திட்டங்களில் ரூபா 2,930,742 ஆன 18 அபிவிருத்தி கருத்திட்டங்களின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி திட்டத்தில் உள்ளடங்கிய எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில், இவ்வாறான குறைபாடுகள் இடம் பெறாமலிருக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஆ) கழிவுப் பொருள் முகாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| | ச.கி.103.56 ஆன சபை அதிகார பிரதேசத்தில் தினந்தோரும் ஒன்று சேர்க்கப்படும் கழிவுகள் உலபனையில் அமைந்துள்ள சபைக்கு சொந்தமான காணியொன்றில் மணணிடப்பட்டு மூடப்படுவதுடன், முறையான கழிவு பொருள் முகாமை வேலைத்திட்டமொன்று காணப்படவில்லை. | கழிவு பொருள் முகாமைக்காக வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட வேண்டும். | 2019 பாதீட்டின் ஊடாக தேவையான ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |

3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 02 உத்தேச நீர் திட்டங்களின் நீர் குலோரின் இட்டேனும் சுத்திகறிக்கப்படாது 92 பாவனையாளர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. | நீர் சுத்திகறிப்பு வேலைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | க்லோரின் மற்றும் சுத்திகறிக்க தேவையான உபகரணங்கள் பெறப்பட்டுள்ளன. |
| (ஆ) | சபைக்கு சொந்தமான குருந்துவத்த நகரில் அமைந்துள்ள காணியொன்றை 2017 ஆண்டு முதல் ஒப்பந்தம் ஏதுமின்றி இலங்கை வங்கி அலுவலகத்தை நடாத்திச்செல்ல குத்தகை வழங்கப்பட்டுள்ளது. | ஆதனம் குத்தகைக்கு வழங்கப்படல் ஒப்பந்தமொன்றின் கீழ் செய்யப்பட வேண்டும். | எதிர் காலத்தில், சட்டரீதியாக ஒப்பந்தத்திற்கு உற்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | சபை குத்தகைகு வழங்கியிருந்த 10 காணிகளின் குத்தகை வாடகை 2007 ஆண்டின் பின் மீள் திருத்தப்பட்டிருக்கவில்லை. | குத்தகை வாடகை திருத்தப்பட வேண்டும். | 2019 ஆண்டு முதல் மீள்திருத்தத்தை நடைமுறைபடுத்துகிறேன். |
| (ஈ) | சபைக்கு சொந்தமான எத்கால வாராந்த சந்தையிலிருந்து வருமாமனத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருமானத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில், வாராந்த சந்தையை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கிறேன். |

3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையினுள் 09 பதவிவெற்றிடங்களும் ஒர் பதவி மிகையும் நிலவியது. | சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி பூர்த்தி செய்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடங்கள் பூர்த்தி செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | ஒழுங்கான முறைமையொன்று இன்றி ஆட்சேர்கப்பட்ட மருந்துக் | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் | எதிர் காலத்தில், இவ்வாறான குறைபாடுகள் இடம் |

| | | | |
|---|---|---|---|
| | கலவையாளர் மருந்துகள் தொடர்பாக வேலைகளை செய்வதால், மருந்து இருப்புகளின் பாதுகாப்பு தொடர்பாக சபை போதிய கவனம் செலுத்தியிருக்கவில்லை. | பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். | பெறாமலிருக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 06 கடையறைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 108,821 ஆன கடையறை வாடகை 12 மாதங்கள் முதல் 24 மாதங்கள் வரையான காலத்திலிருந்து நிலுவையாக இருந்த போதும், ஒப்பந்த பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒப்பந்த பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | சபையினால் கடையறைகளை குத்தகைக்கு வழங்கும் போது, ஒப்பந்தக்காரர்களுடன் கைச்சாதிடப்பட்ட உடன்படிக்கையின் 06ஆம் பரிவு பிரகாரம், குத்தகை வாடகை 03 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்ய வேண்டியதுடன், 53 கடையறைகளின் குத்தகை வாடகை 2010 ஆண்டின் பின்னர் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தங்கள் பிரகாரம், குத்தகை வாடகை 03 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டில் பெறுமதி மதிப்பீடு செய்கிறேன். |

3.5 சொத்துக்கள் முகாமை

3.5.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை அதிகார பிரதேசத்தினுள் அமைந்துள்ள 26 சனசமூக மண்டபங்களை சபைக்கு சுவீகரிக்க தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆதனங்களைமுறையாக சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில், நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | ரூபா 172,990 பெறுமதியான இரண்டு மோட்டார் வண்டிகள் மற்றும் பெறுமதி இனங்காணப்படாத ஜீப் வண்டியொன்றையும் சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆதனங்களை முறையாக சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில், நடவடிக்கை எடுக்கிறேன். |

3.5.2 விளைவற்ற/குறை பயன்பாட்டு சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 452,540 பெறுமதியான 05சொத்து வகைகள் மற்றும் பெறுமதி கணிப்பீடு செய்யப்படாத 01 சொத்து வகையும் 01 ஆண்டுமுதல் 04 ஆண்டுகள் வரையான காலத்திலிருந்து விளைவற்ற/ குறை பயன்பாட்டுடன் நிலவின. | சொத்துக்கள் உச்ச மட்டத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். | பழுதுபார்த்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |

3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அலுவலக செயற்பாடுகளை முகாமை செய்வதற்கான மென் பொருள் தொகுதியொன்றை பெற்றுக் கொள்வது தொடர்பாக ரூபா 780,000 செலவிடப்பட்டு, 2014 ஆகஸ்ட் 22 திகதி வழங்குனர் நிறுவனத்தினுடன் உடன்படிக்கை கைச்சாதிடப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டு இறுதி வரை வீத வரி முகாமைத்துவ தொகுதி மாத்திரமே செயற்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே, மென் பொருளில் பல வித பிரச்சினைகள் உள்ளதாக இனங்கண்டிருக்கையிலும், இரண்டாம் தவணைகான ரூபா 300,000 ஆன தொகையை மற்றும் நிருவப்படுதலும் பயிற்சியும் முடிவு செய்யப்பட்தன் பின் செலுத்த வேண்டிய ரூபா 300,000 ஆன தொகையும், அவ் வேலைகள் மேற்கொள்ளப்பட முன் செலுத்திருந்தது. | உடன்படிக்கை பிரகாரம் அனைத்து முகாமைத்துவ தொகுதிளையும் நிருவ நடவடிக்கை எடுக்க வேண்டும். | மென்பொருள்முறைமை பற்றி பயிற்சி பெற்ற பெண் உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்று சென்றுள்ளதுடன், மீண்டும் உத்தியோகத்கர்களுக்கு பயிற்சி வழங்குமாறு தொடர்புடைய நிறுவனத்திடம் கோரிப்பட்டுள்ளது. எதிர் வரும் மாதத்தினுள் பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மென்பொருளைநாளாதுவரை யாக்க நடவடிக்கை எடக்கிறேன். |